**<u>10/11/2022</u>**

**<u>OS. No. 110 /2013</u>**

**<u>பி.வா.சா.2 மாதவன்</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். வாதிகள் எனக்கு சித்தி உறவுமுறை. என் தகப்பனார் என் தாயார் வைத்துள்ள சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எத்தனை ஏக்கர் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான் விவசாயம் செய்கிறேன். எத்தனை சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்க்ல் செய்துள்ளனர் என்ற விவரமும் தெரியும். வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றால் பங்கு கேட்கிறார்கள். வழக்குரையின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை ஷெட்யூலாக வழககு தாக்க்ல செய்துள்ளார்கள் என்றால் எ ஷெட்யூல் 11 அயிட்டங்களாகவும், பி ஷெட்யூல் 21 அயிட்டங்களாகவும் தாக்கல் செய்துள்ளார்கள். எ, பி ஷெட்யூல் சொத்துக்கள் அனைத்துமே என் தகப்பனார், என் தாயார், என் தாத்தா கண்ணப்பநாயக்கர் சொத்துக்கள். கண்ணப்பநாயக்கர் என் தகப்பனாருடைய பாட்டனார். முனியம்மாள் அப்பா பெயர் குப்புசாமி. குப்புசாமி மனைவி பெயர் சந்தியம்மாள். சந்தியம்மாள் அப்பா பெயர் கெங்கப்ப நாயக்கர் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சந்தியம்மாள் தாயார் பெயர் தனகோட்டியம்மாள் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

தனகோட்டி அம்மாளின் தம்பி பெயர் பூங்காவனம். அவர் மனைவி பெயர்அலுமேலு. பூங்காவனத்தின் அப்பா பெயர் சுப்பாநாயக்கர் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாதிகள் பாகப்பிரிவினை மட்டும் தான் கேட்கிறார்கள். தாவா சொத்தின் விவரம் எந்த அயிட்டத்திற்கும் சர்வே எண் ஞாபகமில்லை. நான் 1973 ம் ஆண்டு பிறந்தேன். என் அப்பா சுந்தரமூர்த்தி 2018 ம் ஆண்டும், என் தாயார் முனியம்மாள் 2019 ம் ஆண்டும் இறந்து விட்டார்கள். எனது வாக்குமூலத்தில் எத்தனை சர்வே எண்கள் வாய்மொழி கிரையம் பெற்றதாக

சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வாய்மொழி கிரையம் போக என் தகப்பனார் கிரையம் வாங்கியது 39 செண்ட், கோவிந்தசாமியிடமிருந்து 1977 ல் என் அப்பா கிரையம் பெற்றார். அது எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியாது.